**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,**
**ஸ்ரீவில்லிபுத்தூர்**

**OS.No: 5/2017** **நாள் 24.03.2026.**

**பி.வா.சா.1, திருமதி.முத்தம்மாள்**

**பி.வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் 2 முதல் 4 எதிர்வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய பிரமாண பத்திரிக்கையில் சொல்லிய சங்கதிகளை நான் சொல்லி தான் வழக்கறிஞர் தயார் செய்தார். இவ்வழக்கில் 1ம் எதிர்வாதியான என் தகப்பனார் தாக்கல் செய்திருந்த எதிர்வழக்குரையிலும் , 2 முதல் 4 எதிர்வாதிகள் தாக்கல் செய்திருந்த எதிர்வழக்குரையிலும் சொல்லியுள்ள விபரங்கள் எனக்கு தெரியும். இவ்வழக்கின் வாதியானவர் இவ்வழக்கில் என்ன சொத்தை பொறுத்து என்ன ஆவணங்களை தாக்கல் செய்து பரிகாரம் கோரியுள்ளார் என்ற விபரமும் எனக்கு தெரியும். 2 முதல் 4 எதிர்வாதிகள் எங்கு குடியிருந்து என்ன வேலையை பார்க்கின்றார்கள் என்ற விபரமும் எனக்கு தெரியும். என் தகப்பனாரை பெற்ற தகப்பனார் 13.03.1994ம் தேதியிலேயே இறந்துபோனார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் கொடிவழி ஜாபிதாவில் சொல்லியுள்ள உறவு முறை அனைத்தும் சரிதான். வாதியானவரின் அப்பா காலமான பின்பு 25ஆண்டுகள் கழித்து தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். இந்த வழக்கில் உள்ள 1வது தபசில் சொத்தானது இவ்வழக்கின் வாதியான முத்தம்மாளின் தகப்பனார் ஆறுமுகம் என்பவர் கிரையம் வாங்கியது என்றால் சரிதான். பிராது 1வது தபசில் சொத்தானதை மேற்படி ஆறுமுகம் என்பவர் இறக்கும் காலம் வரையிலும் தன்னுடைய சுவாதீன அனுபவத்தில் வைத்து அனுபவித்து இறந்துபோனார் என்றால் சரிதான். பிராது 1வது தபசில் சொத்தானதை வாதியின் தகப்பனார் ஆறுமுகம் என்பவர் 16.03.1992ம் தேதி முத்துச்சாமி என்பவருக்கு உயில் ஆவணத்தை எழுதிக்கொடுத்துள்ள விபரம் எனக்கு தெரியுமா என்று கேட்டால் தெரியாது. என் தகப்பனார் தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரையில் சொல்லியுள்ள விபரம் எனக்கு தெரியும். நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய பிரமாண பத்திரிக்கையில் 1ம் எதிர்வாதியான என் தகப்பனார் தாக்கல் செய்திருந்த கூடுதல் எதிர்வழக்குரையில் சொல்லிய விபரங்களை நான் சொல்லவில்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. வாதியானவர் தாக்கல் செய்திருந்த பதில் வழக்குரையை பற்றி எனக்கு தெரியாது. வாதி தாக்கல் செய்துள்ள பதில் வழக்குரையில் சொல்லிய சங்கதிகளும், 1ம் எதிர்வாதியானவர் தாக்கல் செய்திருந்த கூடுதல் எதிர்வழக்குரையில் சொல்லிய சங்கதிகள் அனைத்தும் ஒன்றானதாகவே உள்ளது என்று 2 முதல் 4 எதிர்வாதிகள் சொன்னால் அது தவறு. வழக்கு வாதியும் என் தகப்பனாரும் சேர்ந்து தான் 2 முதல் 4 எதிர்வாதிகளுக்கு எதிராக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்று சொன்னால் அப்படியில்லை. நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய பிரமாண பத்திரிக்கையில் சொல்லிய சங்கதிகளை நிரூபணம் செய்து கொள்ள நான் ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வாசாஆ.1 கிரைய ஆவணத்தில் வாதியின்

தகப்பனாருடன் சேர்ந்து என் தகப்பனார் கிரையம் வாங்கியதாக அதில் காட்டப்படவில்லை என்று சொன்னால் என்னால் வாசாஆ.1 ஆவணத்தை படித்து தெரிந்து கொள்ள முடியவில்லை. பிராது 1வது அயிட்ட சொத்தை வாதியின் தகப்பனாருடன் சேர்ந்து என் தகப்பனார் கிரையம் வாங்கியதற்கான ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் அது சரிதான் அப்போது அவருக்கு உடல் நிலை சரியில்லாமல் இருந்தது. பிராது 1வது இலக்க சொத்தான வீடு பூர்வீக சொத்து அல்ல என்றால் சரிதான். ஆறுமுகம் என்பவர் முத்துச்சாமிக்கு எழுதிக்கொடுத்துள்ள உயில் ஆவணமானது ஒரு பதிவு செய்யப்பட்டுள்ள உயில் ஆவணம் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் அப்படியில்லை. மேற்படி உயில் ஆவணம் செல்லாது என்று சொல்லியோ, மேற்படி உயில் ஆவணம் 2 முதல் 4 எதிர்வாதிகளுக்கு பாத்தியமாக இல்லை என்று சொல்லியோ அல்லது எங்களை கட்டுப்படுத்தாது என்று சொல்லியோ நானும் என் அப்பாவும் தனியாக வழக்கு எதையும் தாக்கல் செய்துகொள்ளவில்லை என்றால் அது சரிதான்.மேற்படி உயில் ஆவணப்படிக்கு கிடைத்த சொத்தானதை 2 முதல் 4 எதிர்வாதிகள் தங்களுக்குள் பாகம் பிரித்துக்கொண்டு தனித்தனியாக சொத்தை அடைந்து அனுபவித்து வருகின்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் அப்படியில்லை. அவ்வாறு பாகம் பிரிக்கப்பட்ட வீட்டில் தற்போது 3, 4 எதிர்வாதிகள் குடியிருந்து வருகின்றார்கள் என்று சொன்னால் அப்படியில்லை. பிராது 2ம் அயிட்ட சொத்தானது என் தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். பிராது 2ம் இலக்க சொத்தானது பொது சொத்து என்று காட்டுவதற்குரிய ஆவணம் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் என் தகப்பனார் ஆஜராகி சாட்சியம் அளித்தால் உண்மை விபரம் தெரியவந்துவிடும் என்பதற்காக வேண்டி அவரை விசாரித்துகொள்ளாமல் நான் ஆஜராகி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அப்படியில்லை என் தகப்பனாருக்கு உடல் நலம் சரியல்லை. பிராது 1வது இலக்க சொத்தானது வாதியின் தகப்பனாரின் சுயமான கிரையம் வாங்கப்பட்ட சொத்து என்பதால் 1ம் எதிர்வாதியான என் அப்பாவுக்கு அதில் பங்கு பாகம் எதுவும் இல்லை என்று சொன்னால் அது சரியல்ல. இவ்வழக்கில் வாதிக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல . என்னுடைய சாட்சியம் ஏற்புடையதாக இல்லை என்றும் வாதியின் வழக்கை தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்று சொன்னால் அது சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை வாதிகள் தரப்பில்</u>**

என் தாத்தா ஆறுமுகத்தின் முதல் மனைவி பெயர் முத்தம்மாள். அந்த முத்தம்மாள் என்பவருக்கு பிறந்தவர் தான் என் தகப்பனார். மேற்படி ஆறுமுகத்தின் முதல் மனைவி முத்தம்மாள் இறந்த பிறகு என் தாத்தா ஆறுமுகம் வேலம்மாள் என்பவரை 2ம் தாரமாக திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். மேற்படி வேலம்மாள் என்பவருக்கு இவ்வழக்கின் வாதி முத்தம்மாள் மற்றும் 2 முதல் 4 எதிர்வாதிகளின் தகப்பனார் முத்துச்சாமி ஆகியோர்கள் குழந்தைகள் என்றால் சரிதான். பிராது 1ம் அயிட்ட

சொத்தானது என் தாத்தாவுக்கு கிரையம் மூலமாக பாத்தியப்பட்டது என்றால் ஆமாம். பிராது 2ம் அயிட்ட சொத்தானது என் தாத்தாவுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்றால் ஆமாம். என் தாத்தா 1994ம் ஆண்டு காலமானார். அவர் இறக்கும் காலம் வரையிலும் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை பொறுத்து யாருக்கு எந்தவிதமான ஆவணமும் எழுதி வைக்கவில்லை என்று சொன்னால் அது சரிதான். பிராது சொத்தில் என் தகப்பனாருக்கு 1/3 பங்கு பாகமும், அது போல் வாதி முத்தம்மாளுக்கு 1/3 பங்கு பாகமும் உள்ளது என்றால் சரிதான். வாதிக்கு பிராதில் கோரியபடி 1/3 பங்கு பாகம் பிரித்து கொடுப்பதில் 1ம் எதிர்வாதியான எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை.

**மறுவிசாரணை – இல்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 24th day of March 2026.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.